**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**C011 இருபதாம் நூற்றாண்டு கவிஞர் இருவர்**
**ஜனவரி–பிப்ரவரி 2024**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. பாரதி தெய்வம் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?
2. குயில்பாட்டு எந்த இடத்தில் தோன்றியது?
3. ஆங்கிலக் கல்வியின் விளைவால் நேர்ந்த அவலம் யாது?
4. பெண் விடுதலைக்காக என்ன முறையைக் கையாளுமாறு பாரதியார் அறிவுறுத்துகிறார்?
5. கவிதையை முழுமையாக அறிந்துகொள்ள உதவும் இரு நிலைகள் எவை?
6. அகமண முறை என்பதைன் பொருள் என்ன?
7. பாரதியின் முப்பெரும் கோட்பாடுகள் யாவை?
8. பொறுப்பில்லாத தலைவி படுக்கையிலிருந்து எழுந்ததை எவ்வாறு பாரதிதாசன் பாடியுள்ளார்?
9. பெண்கள் பல தீமைகளிலிருந்து விடுபட எது அவசியம் என்கிறார் பாரதி?
10. களை எடுக்கும் பெண்ணின் முகத்தைப் பாவேந்தர் எவ்வாறு உவமைப்படுத்தியுள்ளார்?
11. குடும்ப விளக்கு என்ற படைப்பில் தலைவியின் பெயர் என்ன?
12. தமிழ்நாட்டை எவ்வாறு பாரதிதாசன் வாழ்த்துகிறார்?
13. பெற்றோர் ஆவல் என்னும் பாடலில் பாரதிதாசன் குறிப்பிட்டுள்ள தமிழ் இசைக்கருவி யாது?
14. நாடகங்கள் எவற்றால் சிறப்பைப் பெறும்?
15. கற்பூரப் பெட்டகம் என்று பாரதிதாசன் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. பாரதியார் கண்ணனை எந்தெந்த உறவுகளில் வைத்துப் பாடியுள்ளார்?
2. தமிழ்நாட்டு மாதருக்குப் பாரதியார் விடுக்கும் செய்தி யாது?
3. தீவிரவாதியாக இருந்த பாரதியார் மிதவாதியாக மாறக் காரணம் என்ன?
4. தமிழை வளம்படுத்துதற்குரிய வழிகள் எனப் பாரதி குறிப்பன யாவை?
5. மதம் சமுதாயத்தில் என்ன செய்யுமென்று பாரதிதாசன் கருதுகின்றார்?
6. தலைவர் இரவில் வீட்டுக் கதவை எவ்வாறு தட்டினார்?
7. மலையின் அழகைப் பாரதிதாசன் எவ்வாறு எடுத்துரைக்கிறார்?
8. பிசிராந்தையார் என்னும் நாடகத்தில் இடம்பெற்றுள்ள புலவர்களின் பெயர்களை எழுதுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பாரதியின் பத்திரிகை பணி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பாரதியாரின் தமிழ்ப்பற்று குறித்து கட்டுரை வரைக.

2. (அ) பாரதியின் உலக நோக்கிற்கு உரமிட்ட கோட்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசன் கண்ட இயற்கை குறித்து கட்டுரை வரைக.

3. (அ) தமிழ்மொழியும் தமிழினமும் உயர்வு எய்திட பாரதிதாசனின் காப்பியங்கள் வழிகாட்டுகின்றன என்பதை நிறுவுக.

(அல்லது)

(ஆ) பாரதிதாசனின் பெண்ணுலகம் குறித்து கட்டுரை எழுதுக.

***